**நல்வரவு**

## Tamil / தமிழ்

**மேற்கு அவுஸ்திரேலிய மாநிலத்திற்கு உங்களை வரவேற்கிறோம்!**
மேற்கு அவுஸ்திரேலியா மாநிலமானது அவுஸ்திரேலியாவில் ஆகக்கூடிய கலாச்சாரத்தினால் வேறுபட்ட மக்கள் வாழும் ஒரு மாநிலமாகும். மேற்கு அவுஸ்திரேலியாவின் ஐந்து லட்சத்திற்கும் மேலான, அதாவது சனத்தொகையில் கால் (27%) பங்கு மக்கள் வெளிநாடுகளில் பிறந்தவர்கள். மேற்கு அவுஸ்திரேலியாவில் 200 நாடுகளுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்த மக்கள் வாழுகிறார்கள், தொழில் செய்கிறார்கள் மற்றும் கல்வி கற்கிறார்கள். இவர்கள் 270 மொழிகள் மட்டில் பேசுவதுடன் 100 - க்கும் அதிகமான மதங்களைப் பின்பற்றுகிறார்கள்.

எமது பாரிய மாநிலத்தில் அனைத்தையும் உள்ளடக்கிய சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார வாழ்கையில் நீங்கள் பங்கேற்கும் வகையில் பல்தரப்பட்ட தகவல்களையும், மூலவளங்களையும் இந்த இணையத்தளம் வழங்குகிறது.

**பல்கலாச்சார நலன்கள் காரியாலயம் (OMI)**
**(Office of Multicultural Interests (OMI))**

'பல்கலாச்சார நலன்கள் காரியாலயம் (OMI)' உள்ளுராட்சித் திணைக்களத்தின் ஒரு பிரிவாகும். கலாச்சாரம், மொழி, மற்றும் மதங்களினால் வேறுபட்ட பின்புலத்தையுடைய மேற்கு அவுஸ்திரேலிய மாநில மக்களுக்கான சேவைகளை முன்னேற்றுவதுடன் பல்கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் உள்ளுராட்சிக் கொள்கைகள் மற்றும் திட்டங்களுக்கும் OMI ஆதரவளிக்கிறது. மேற்கு அவுஸ்திரேலிய மாநில சமூகத்திற்கு பொதுத் துறை மத்தியில் பல்கலாச்சார முக்கியத்துவம் வழங்குவதுடன் ஒரு கூடிய செழிப்பானதும், உள்ளடக்கும் சமுதாயத்தையும், ஆக்கமுறைப்பட்ட கூட்டுத்தொழில் வர்த்தக அபிவிருத்தியையும் OMI வழங்குகிறது.

'பல்கலாச்சார நலன்கள் காரியாலயத்தின் கேந்திரத் திட்டம் 2009-2013' (The Office of Multicultural Interests' Strategic Plan 2009-2013) பின்வரும் குறிக்கோள்களைக் கோடிட்டுக் காட்டுகிறது.

- பங்குபற்றுதல் - 'கலாச்சாரம் மற்றும் மொழியினால் வேறுப்பட்ட பல்வேறு சமூகங்கள்' (Culturally and Linguistically Diverse Communities (CALD)) சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார வாழ்கையில் முழுமையாக பங்குபற்றுதல்.
- சமத்துவம் - CALD சமூகங்கள் எதிர்கொள்ளும் சமத்துவத்திற்கு எதிரான தடைகளை அகற்றல்.
- ஊக்குவித்தல் - மேற்கு அவுஸ்திரேலியாவின் கலாச்சார மற்றும் மொழிவேற்றுமையின் நன்மைகளை ஊக்குவித்தல்.

பிரசாவுரிமை (குடியுரிமை), விசா அல்லது குடிவரவு விடயங்களுக்கு OMI பொறுப்பாயிருக்கிறது. குடிவரவு அல்லது ஒரு அவுஸ்திரேலியப் பிரஜை அந்தஸ்தைப் பெறுவதற்கு ‘குடிவரவு மற்றும் குடியுரிமைத் திணைக்கள’(Department of Immigration and Citizenship)த்தினை 13 18 81 - இல் அழைக்கவும் அல்லது வலைத்தளம் www.diac.gov.au ஐப் பார்க்கவும்.

## கொள்கைகளும் திட்டங்களும்

### மொழிச் சேவைகள்

‘மொழிச் சேவைகள் கொள்கை 2008’ (The Language Services Policy 2008) என்பது மேற்கு அவுஸ்திரேலிய மாநிலம் முழுதும் பின்பற்றப்படும் கொள்கையாகும். சேவைகளையும் திட்டங்களையும் அணுகுவதில் ஆங்கில உதவி தேவைப்படும் மக்களுக்கு மொழி ஒரு முட்டுக்கட்டை அல்ல என்பதை இது உறுதி செய்கிறது. பூர்வீகப்பழங்குடிகள், குடிபெயர்ந்தவர்கள், மற்றும் செவியுணர்வு பாதிக்கப்பட்டோர் ஆகியோர் மேற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தில் பயன்பெறும் வகையில் சேவையினருடன் தொடர்பு கொள்ள உதவி தேவைப்படுபவர்களில் உள்ளடங்குவர்.

நீங்கள் ஒரு அரசாங்க அலுவலகத்திற்கு செல்லும்போது ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ள உதவி தேவைப்பட்டால் ஒரு உரைபெயர்ப்பாளரை வழங்கும்படி நீங்கள் கேட்கலாம். உரைபெயர்ப்பாளர்கள் இலவசமாக வழங்கப்படுவர். இதற்கென நீங்கள் ஒரு ‘மேற்கு அவுஸ்திரேலிய மாநில உரைபெயர்ப்பாளர் அட்டை’ (Western Australian Interpreter Card) ஒன்றைக் கோரலாம்.

‘உரைபெயர்ப்பாளர் அட்டை’ ஒன்றைப் பெற, இந்த வலைத்தளத்திலுள்ள ‘வெளியீடுகள் பிரி’வில் ‘*மேற்கு அவுஸ்திரேலிய மாநிலப் புது வரவாளருக்கான சேவை விவரக் கொத்து’ (Directory of Services for New Arrivals in Western Australia) -* இல் அட்டவணையிடப்பட்டுள்ள உங்களுக்கு அருகில் உள்ள குடியேற்ற சேவைகள் வழங்குநருடன் தொடர்பு கொள்ளலாம்.

உரைபெயர்ப்பாளரின் உபயோகம் பற்றிய தகவல்களை ‘பல்கலாச்சார நலன்கள் காரியாலயம்’ (OMI) வழங்கலாம். மேலதிக விவரங்களுக்கு தயவு செய்து இந்த வலைத்தளத்தின் மொழிச் சேவைகள் பகுதியைப் பார்க்கவும்.

**சமூக மானியத் திட்டம் (Community Grants Program (GGP))**

‘பல்கலாச்சார நலன்கள் காரியாலயம்’ ஒரு ‘சமூக மானியத் திட்ட’(GGP)த்தினை நிர்வகிக்கிறது. தடைகளை அகற்றி பல்கலாசார ஈடுபாட்டினை மேம்படுத்தும் திட்டங்களிலும், நிகழ்சிகளிலும் அனைத்து மேற்கு அவுஸ்திரேலிய மாநிலவாசிகளும் சமமாய்ப் பங்கேற்க வேண்டும் எனும் கருத்தினை ஊக்குவிக்கும் வகையில் OMI திட்டத்திற்கு GGP-யின் குறிக்கோள்கள் ஆதரவளிக்கின்றன.

மேற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தில் இருக்கும் இலாப நோக்கற்ற கூட்டிணை நிறுவனங்களும், சமூக அமைப்புக்களும் நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கலாம். இரண்டு வகையான மானிய ரகங்கள் உள்ளன - ‘சமூக அதிகாரம் அளிக்கும் திட்டங்கள்’(Community Empowering Projects) (இதற்கு $15,000 வரை கிடைக்கும்) மற்றும் ‘கலப்புக் கலாச்சார விழாக்கள், நிகழ்ச்சிகள் மற்றும் கொண்டாட்டங்கள்’ (Cross Cultural Festivals Events an Celebrations) (இதற்கு $5000 வரை கிடைக்கும்).

மேற்கு அவுஸ்திரேலிய மாநில சமூகத்தின் நன்மை கருதி உங்களது விண்ணப்பங்களை வரவேற்று உங்களுடன் இணைவாய்ப் பணியாற்ற OMI விரும்புகிறது. இது குறித்த மேலதிகத் தகவல்களைப் பெறவும், கடந்த மானியப் பெறுநர்களின் விவரங்களைப் பெறவும், நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கும் தகுதி உங்களது நிறுவனத்திற்கு உள்ளதா என்பதை அறியவும், அல்லது ஒரு முறையான விண்ணப்பத்தினைக் கையளிப்பதற்கு முன் உங்களது திட்டம் குறித்து கலந்தாய நீங்கள் விரும்பினாலும் தயவு செய்து OMI மானிய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

வழிகாட்டிகள் மற்றும் விண்ணப்பப் படிவங்களின் பிரதிகளுக்கு இந்த வலைத் தளத்தின் ‘சமூக மானியத் திட்ட’ப் பகுதியைப் பார்க்கவும்.

**மூலவளங்கள் மற்றும் வெளியீடுகள்**

மேற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தினது கலாச்சார வேற்றுமை, கலாசாரம் மற்றும் மதம் ஆகியன குறித்து சேவை வழங்குநர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் பாடசாலைகளுக்கான கல்விச் சாதனங்கள் போன்றவற்றின் புள்ளி விவரங்கள் உட்பட்ட பல்வகையான தகவல்களும் வெளியீடுகளும் இந்த வலைத்தளத்தில் கிடைக்கும். குறிப்பாக, நீங்கள் மேற்கு அவுஸ்திரேலிய மாநிலத்திற்கு புதிதாக வந்தவராக இருந்தால் ‘*மேற்கு அவுஸ்திரேலிய மாநிலப் புது வரவாளருக்கான சேவை விவரக் கொத்து’ (Directory of Services for New Arrivals in Western Australia)*எனும் தகவலேடு உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

**மேற்கு அவுஸ்திரேலிய மாநிலப் புது வரவாளருக்கான சேவை விவரக் கொத்து**

மேற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தில் அரசாங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வர்த்தகக் குழுக்கள் ஆகியவற்றில் இருந்து கிடைக்கப்பெறும் பல சேவைகளைப் புரிந்து கொள்வது ஒரு சவாலாக இருக்கலாம்.

2010-ஆம் ஆண்டின் *'மேற்கு அவுஸ்திரேலிய மாநிலப் புது வரவாளருக்கான சேவை விவரக் கொத்து' (Directory of Services for New Arrivals in Western Australia)*எனும் தகவலேடு மிகவும் பிரபல்யமான 2005 ம் ஆண்டைய பதிப்பின் ஒரு புதுப்பிப்பாகும். சாலை-வழிப்பாதைகளைக் காட்டும் இந்த ஒரு தகவலேட்டின் உதவி கொண்டே நீங்கள் எங்கும் இலகுவாய்ப் பயணிக்கலாம்.

வீட்டுவசதி, வேலைவாய்ப்பு, உடல்நலம், போக்குவரத்து, குழந்தை கவனிப்பு, மற்றும் சட்ட சேவைகள் - அத்துடன் பொதுநலவரசு, மாநில, மற்றும் உள்ளூராட்சி அரசாங்கங்களின் பின்புலத் தகவல்கள் போன்ற இன்றியமையாத தகவல்களையும் தொடர்பு விவரங்களையும் இந்த விவரக்கொத்து வழங்குகிறது.

*'மேற்கு அவுஸ்திரேலிய மாநிலப் புது வரவாளருக்கான சேவை விவரக் கொத்து' (Directory of Services for New Arrivals in Western Australia)* எனும் இந்த விவரக்கொத்தினை இந்த இணையத் தளத்தின் வெளியீடுகள் பகுதியில் பார்வையிடலாம்.

**நீங்கள் இனத் துவேஷம் அல்லது பாரபட்சத்திற்கு ஆளாகியிருக்கிறீர்களா?**

இனம் அல்லது மதம் காரணமாக ஒருவரை பாரபட்சமாக நடத்துவது சட்டவிரோதமான செயலாகும்.

இனத் துவேஷ நோக்குடைய நிகழ்ச்சி ஒன்று உங்களுக்கு ஏற்பட்டிருந்தால் அந்த நிகழ்சியை மேற்கு அவுஸ்திரேலிய மாநில காவல்துறையினருக்குத் தெரிவிக்குமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள். மேற்கு அவுஸ்திரேலிய மாநில காவல்துறை உதவி மையத்தை 131444 -இல் தொடர்பு கொள்ளலாம்.

வயது, குடும்பப் பொறுப்பு, குடும்ப நிலைமை, பால் வரலாறு, உடலியலாமை அல்லது வலுக்குறை, விவாக நிலைமை, அரசியல் நம்பிக்கை, கர்ப்பம், இனம், மத நம்பிக்கை, பாலினம், பாலியல் நாட்டம் மற்றும் சிறைவாசம் ஆகிய காரணங்களுக்காக யாரையும் கீழ்வரும் வசதிவாய்ப்புகளில் பாரபட்சப்படுத்துவது சட்ட விரோதமானது என்று 'மேற்கு அவுஸ்திரேலிய சம வாய்ப்புச் சட்டம் - 1984' கூறுகிறது:

- இடங்கள் மற்றும் வாகனங்களுக்குள் பிரவேசித்தல்
- இருப்பிட வசதி
- கல்வி வசதி
- வாழ்க்கை வசதிகள் மற்றும் சேவைகள்
- நிலச் சொத்து

- மன்றங்களில் அங்கத்துவம்
- பொருட்களை வழங்கப்பெறல்
- வேலைவாய்ப்பு அல்லது தொழில்

மேலே கூறப்பட்ட எந்த ஒரு காரணத்திற்காகவாவது நீங்கள் பாரபட்சப்படுத்தப்பட்டிருந்தால் இது குறித்து நீங்கள் ஆலோசனை நாடலாம் மற்றும் ‘மேற்கு அவுஸ்திரேலிய மாநில சமவாய்ப்பு ஆணைய’ருக்கு ஒரு முறையீட்டினைத் தாக்கல் செய்யலாம். தயவு செய்து ‘சமவாய்ப்பு ஆணைய’த்தினை 9216 3900 - இல் அழையுங்கள் அல்லது எப்படி ஒரு முறையீட்டைத் தாக்கல் செய்யலாம் என்பதற்குரிய விவரங்களுக்கு www.eoc.wa.gov.au எனும் வலைத்தளத்தினைப் பாருங்கள்.

OMI இன் முயற்சிகள் மற்றும் திட்டங்கள் பற்றிய கூடுதலான தகவலுக்கு தயவு செய்து கீழ்வரும் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்:


Office of Multicultural Interests
Department of Local Government
DƵǁǇƵƴ {ƋƵĂƌĞ ŽĨĨŝĐĞƐ
мпл ² ǁĞůůŝŶŐƚŽŶ {ƚƌĞĞƚ
PERTH WA 600л
**தொலைபேசி**: (08) 6552 1500
**தொலைநகல்**: (08) 6552 1555
**மின்னஞ்சல்**: harmony@omi.wa.gov.au
**இணையத்தளம்**: www.omi.wa.gov.au